தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயத்துக்கு தனி பட்ஜெட்: விவசாயிகள் சங்கம் தீர்மானம்

இடம்பெயரும் மக்களுக்கு விவசாயத்தின் மீது நம்பிக்கை வருவதற்காக விவசாயத்துக்கென தனி பட்ஜெட் உருவாக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்க 25-ஆவது மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருச்சியில் நடைபெற்று வரும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்:

வெள்ள பாதிப்பிலிருந்து தப்பிக்க, உபரிநீரை திறந்து விட்டு, தேவையான அளவு தண்ணீரை கொடுத்துவிட்டதாக கர்நாடகா அரசு கூறுவது தமிழகத்தின் பாரம்பரிய உரிமையை அவமதிக்கும் செயலாகும். எனவே, மத்திய அரசு, காவிரி மேலாண்மை வாரியம், ஒழுங்குமுறைக் குழுவை விரைந்து அமைக்க வேண்டும்.

தானிய உற்பத்தியைப் பாதுகாக்க மானாவாரி புன்செய் விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் விதை, இடுபொருள்கள் வழங்க வேண்டும். மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். பொதுப் பணித் துறை மூலமே மணல் விற்பனை செய்ய வேண்டும். மாட்டு வண்டிகளில் மணல் அள்ள அரசு வழிகாட்ட வேண்டும். பருவமழை தவறுவது, வறட்சி ஆகியவற்றைத் தவிர்க்க, காடுகள் வளர்ப்பை ஊக்குவித்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். நதிகளை இணைக்க மத்திய, மாநில அரசுகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மதுரையை வந்தடைந்தது வைகை நீர்

வைகை அணையில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை பகலில் மதுரையை வந்தடைந்தது. கேரளத்தில் பெய்த மழையால் பெரியாறு அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் வைகை அணைக்கும் பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 47.24 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 949 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிக்கிறது. இதையடுத்து, விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைக்காக கடந்த 14ஆம் தேதி வைகை அணையிலிருந்து 1500 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அந்த தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை பகலில் ஆழ்வார்புரம் பகுதியை வந்தடைந்தது. இதனால் ஆற்றில் பரவலாக தண்ணீர் ஓடியது. மீண்டும்

மழை: மதுரை நகரில் சனிக்கிழமை பெய்த மழையால் பல இடங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கி சகதிக்காடாக காட்சியளித்தது. கனகவேல்காலனி பகுதியில் பள்ளங்கள் அதிகமிருப்பதால் அங்கு சகதி நீர் தேங்கி கொசுக்கள் தங்கி தொற்றுநோய் பரவும் வாய்ப்புள்ளதாக அப்பகுதி மக்கள் கூறினர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பிறகு, மாலை 5.30 மணிக்கு மேல் நகரின் பல இடங்களில் பெய்த பலத்த மழை இரவு வரை தொடர்ந்தது. மாவட்டத்தில் சனிக்கிழமை மாலை வரை பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): மதுரை 13.2, வாடிப்பட்டி ஆண்டிபட்டி பங்களா 8, கள்ளந்திரி 4, சிட்டம்பட்டி 15, புலிப்பட்டி 4.2, தனியாமங்கலம் 4, மேலூர் 3, இடையபட்டி 4, விரகனூர் 6.8.

**<u>கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்ததால் சர்க்கரை ஆலைகளுக்கு நெருக்கடி'</u>**

கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்துவிட்டதால் சர்க்கரை ஆலைகள் கடும் நெருக்கடியில் உள்ளதாக, தமிழக அரசின் வேளாண் துறை இயக்குநர் டாக்டர் எம்.ராஜேந்திரன் தெரிவித்தார். தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம், கோவை கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம் இணைந்து, வறட்சி மேலாண்மை மற்றும் கரும்பு உற்பத்தியை மேம்படுத்துதல் தொடர்பான கருத்தரங்கை கோவையில் சனிக்கிழமை நடத்தின. இதில், வேளாண் துறை இயக்குநர் எம்.ராஜேந்திரன் பேசியது: கடந்த 10 ஆண்டுகளில் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலை அதிகளவில் உயர்ந்துள்ளது. கரும்பு விவசாயத்தில் உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை. தமிழகத்தில் ரசாயன உரங்களைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. இதன் மூலமாக மண்ணின் தன்மை கெட்டுவிட்டது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துவிட்டது. கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்துவிட்டதால் பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் கடும் நெருக்கடியில் உள்ளன. விவசாயிகள், அரிசி உற்பத்திக்கு மாறியுள்ளனர் என்றார். வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி பேசுகையில், இந்தியாவுக்கு வறட்சி புதிதல்ல. வறட்சியைத் தாங்கும் வகைகள் தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தமிழகம் முழுவதும் 57 இடங்களில் வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. இவற்றில் 29 இடங்கள் மழைப்பொழிவு அதிகமுள்ளவை. விவசாயிகள் எப்போதும் கரும்பு பயிரிட விரும்புவதில்லை; ஆனால், சர்க்கரை ஆலைகள் கரும்பை விரும்புகின்றன. விஞ்ஞானிகள் இதற்கு மாற்றுத் தீர்வைத் தர முடியும். கரும்பில் இருந்து பல்வேறு பொருள்களைத் தயாரிக்க முடியும். கரும்பு ஆலைகள் தங்களுக்கு கிடைக்கும் லாபத்தில் விவசாயிகளுக்கு எவ்வளவு தருகின்றனர் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

கரும்புக்கு 40 சதவீதம் கூடுதல் தண்ணீர் தேவை. எதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

## <u>தேவையான விதை நெல் இருப்பு</u>

கலசப்பாக்கம் வட்டத்தில் நடப்பு வேளாண் பருவத்துக்கு தேவையான விதை நெல்கள் போதுமான அளவு இருப்பு உள்ளதாகவும், நீண்ட கால பயிரான பொன்னி, குறுகிய கால பயிர்களான ஏ.டி.டி.43,45,737 ஆகிய ரகங்கள் இருப்பில் உள்ளன. எனவே வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகள் விதை நெல்லை தேவையான அளவு வாங்கிச் செல்லலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரம் தெரிவித்தார். மேலும் ஏ.டி.டி.43,45,737 ஆகிய ரகங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.5 மானியம் வழங்கப்படுகிறது. எனவே இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

## <u>ஒகேனக்கலில் நீர்வரத்து 24 கன அடியாக அதிகரிப்பு</u>

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் ஞாயிற்றுக்கிழமை நீர் வரத்து நொடிக்கு 24 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. கடந்த சில நாள்களாக ஒகேனக்கல் அருவிக்கு வரும் நீர் வரத்து குறைவாக இருந்தது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நீர் வரத்து அதிகரித்து 18,000 கன அடியாகவும், சனிக்கிழமை மேலும் அதிகரித்து 19,000 கன அடியாக உள்ளது. இதில், ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து மேலும் 5 ஆயிரம் கனஅடி அதிகரித்து நொடிக்கு 24 கன அடியாக இருந்தது. ஒகேனக்கல்லில் கர்நாடகப் பகுதியில் இருந்து ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளுக்கு படகு இயக்கப்படுகிறது. இதனால் சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி செய்ய அருவியில் கர்நாடகப் பகுதி அதிக அளவில் செல்கின்றனர். இந்த நிலையில், விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை ஒகேனக்கல்லுக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தங்களது குடும்பத்துடன் வந்து அருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

## <u>பரமத்தி வேலூரில் திடீர் என இடியுடன் கூடிய பலத்த மழை: பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி</u>

பரமத்தி வேலூரில் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் பொதுமக்களும் விவசாயிகளும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. பரமத்தி வேலூர் பகுதியில் மட்டும் மழை பெய்யாததால் பொதுமக்களும், விவசாயிகளும் மிகுந்த கவலை அடைந்திருந்தனர். பரமத்தி வேலூரில் காவிரியாறு இருந்தாலும் விளை நிலங்களுக்கு வாய்க்கால் பாசனத்தை நம்பியே விவசாயிகள் உள்ளனர். ஆடி மாதத்தில் பெய்யும் மழையை நம்பி கிராமப்புற பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களில் கடலை,மற்றும்

சோளம்,ஊடுபயிராக தட்டைப்பயிர்,துவரை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிர் செய்வார்கள். ஆனால் இந்த ஆண்டு குறிப்பிட்ட மாதத்தில் மழை பெய்யாததால் மானாவாரி விவசாயிகலும் கவலையாடைந்துள்ளனர். இந் நிலையில் பரமத்தி வேலூர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. பல மாதங்களுக்கு பிறகு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தததால் விவசாயிகளும்,பொது மக்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>பால் உற்பத்தியில் அரியலூர் தன்னிறைவு பெற வேண்டும்</u>**

அரசு வழங்கும் சலுகைகளைப் பயன்படுத்தி அரியலூர் மாவட்டத்தை பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதாக மாற்றிட வேண்டும் என்றார் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தாமரை எஸ். ராஜேந்திரன். அரியலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கிட, அரியலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் கூட்டம், சனிக்கிழமை ஜயங்கொண்டத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். அரியலூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் தாமரை எஸ். ராஜேந்திரன் மேலும் பேசியது:

தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியை பெருக்கிட மானிய விலையில் தீவனம், பசும்புல்,வைக்கோல் போன்ற கறவைக்கு அடிப்படை யானவற்றை தாராளமாக வழங்கி வருகிறது. தரமான பால் வழங்கும் சங்கங் களுக்கு ஊக்கத்தொகை, பால் பரிசோதனைக் கருவியையும் வழங்குகிறது. உற்பத்தியாளர்களுக்கும் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கி வருகிறது. இதை சங்கத் தலைவர்கள், செயலர்கள், பணியாளர்கள் அனைவரும் உற்பத்தியாளர்களுக்கு உணர்த்திடும் வகையில் தெரியப்படுத்தி சிறப்புடன் பணியாற்றி, பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான பால் உற்பத்தியைப் பெருக்கி அரியலூரை பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதாக மாற்றிட வேண்டும். மேலும் 150 லிட்டருக்கு மேல் கொள்முதல் செய்யும் சங்கப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிட தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளதை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர். ஆவின் இயக்குநர் சிவசங்கர்,கண்ணகி,இணைய இயக்குநர் முருகேசன், கீழப்பழூவூர் சங்கச் செயலர் பாஸ்கர், திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் அயிலை பழனியாண்டி, இடைக்காடு சங்கத் தலைவர் அன்பழகன்,ஆவின் ஒன்றியத் துணைத் தலைவர் பாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சிலம்பூர்,இடைக்கட்டு, கவரப்பாளையம்,பரணம் ஆகிய சங்கங்களுக்கு பால் பரிசோதனைக் கருவியை ஆவின் ஒன்றியத் தலைவர்பழனியாண்டி வழங்கினார். அரியலூர் பால் கூட்டுறவுச் சங்கச் செயலர்

இளங்கோவன் வரவேற்றார். இலையூர் சங்கச் செயலர் ரோஜாக்கனி நன்றி கூறினார்.

**<u>சம்பா சாகுபடிக்கு தேவையான இடுபொருள்கள் போதிய அளவில் இருப்பு உள்ளன</u>**

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவரி பாசனம் பெறும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சம்பா சாகுபடிக்குத் தேவையான உரங்கள், நெல்விதைகள் போதிய அளவில் இருப்பில் உள்ளதாக கூட்டுறவுத் துறை தெரிவித்துள்ளது. இது குறித்து கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கே.வி.எஸ். குமார் வெளியிட்ட தகவல்:

மாவட்டத்தில் உள்ள காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் நடப்பு சம்பாப்பருவ சாகுபடிக்குத் தேவையான யூரியா, பொட்டாஷ், டிஏபி மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் 2420 டன் களும், பிபிடி, ஆடுதுறை 39 போன்ற சான்றளிக்கப்பட்ட நெல் விதைகள் 148 டன் கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. எனவே காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயி கள் தங்களுக்குத் தேவையான இடு பொருள்களை தங்களது பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வாங்கிப் பயன் பெற

லாம்.

**<u>தஞ்சை பகுதியில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக இரவு நேரங்களில் கொட்டித் தீர்த்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவும், சனிக்கிழமை இரவும் பலத்த மழை பெய்தது. கோடை முடிந்தும் கடும் வெயிலால் அவதிப்பட்டு வந்த தஞ்சை மாவட்ட மக்கள், 2 நாட்கள் பெய்த மழையால் வெப்பம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியதால் மகிழ்ச்சியடைந்தனர். சம்பா சாகுபடிக்கு மேட்டூரிலிருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், திடீரென 2 நாட்களாக மழையும் பெய்து வருவது, மாவட்ட விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூர், வல்லம் பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பின்பக்க சுற்றுச்சுவர் ரகுமான் நகர் அருகே இடிந்து விழுந்தது. அதேபோல, புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள சரபோஜி அரசுக் கல்லூரியின் பின்பக்க சுற்றுச்சுவரும் மழையால் இடிந்து விழுந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த மழையளவு:

வல்லம் 96 மிமீ, வெட்டிக்காடு 78.40, தஞ்சாவூர் 73.80, மதுக்கூர் 59.20, பேராவூரணி 48.20, பாபநாசம் 48, நெய்வாசல் தென்பாதி 47.60, கும்பகோணம்

47, ஈச்சன்விடுதி 33, திருவிடைமருதூர் 32.40, பட்டுக்கோட்டை 32, மஞ்சலாறு 31.60, பூதலூர் 31.20, அய்யம்பேட்டை 28, அதிராம்பட்டினம் 26.60, திருவையாறு 20.60, அணைக்கரை 19, ஒரத்தநாடு 17.20, திருக்காட்டுப்பள்ளி 16.20, குருங்குளம் 13, கல்லணை 2.60 மிமீ.

**முத்துப்பேட்டையில் பலத்த மழை**

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் சனிக்கிழமை 47.4 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகவே வானம் கருமேகத்துடன் இருந்து வந்தது. வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. தொடர்ந்து சனிக்கிழமை நள்ளிரவு சுமார் 45 நிமிடங்களுக்கு மேலாக தொடர் மழை பெய்தது. இதனால் வயல் வெளிகளில் நீர் தேங்கியுள்ளது. தற்போது மாவட்டத்தில் சம்பா நடவுக்கான பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். திருவாரூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட இடங்களில் புழுதி உழவு செய்து பெரும்பான விளைநிலங்களில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த மழையின் காரணமாக ஞாயிற்றுக்கிழமை வெயிலின் தாக்கம் குறைந்திருந்தது.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்க வேளாண் உதவி அலுவலர்களுக்கு கையடக்கக் கணினி**

திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண் துறையில் வேளாண் உதவி அலுவலர்களாகப் பணிபுரியும் 83 பேருக்கு கையடக்கக் கணினி வழங்கப்பட்டது.

வேளாண் உதவி அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் பாளையங் கோட்டையில் நடைபெற்றது. முகாமில் பயிர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயியின் பயிர்த் திட்டத்தைத் தயாரித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது, இடுபொருள்கள் மற்றும் மகசூல் கணக்கிடும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதுகுறித்து திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் கூறியதாவது: திருநெல்வேலி மாவட்டத்தில் இத்துறையில் பணி செய்யும் வேளாண் உதவி அலுவலர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கப்பட்டுள்ளது. இக்கணினியின் மூலம் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய தொழில்நுட்ப ஆலோசனை, பயிரைத் தாக்கும் பூச்சி, நோய்களுக்கான பயிர் மேலாண்மை முறைகளை படங்களுடன் விளக்கம் அளிக்கலாம். விவசாயி களுக்கு தேவையான இடுபொருள்கள் கிடைக்கும் மையங்கள் குறித்த விவரங்களைத் துல்லியமாக அளிக்க முடியும். விவசாயிகள் அவரவர் வயலில் உள்ள மண்ணின் தன்மைக்கு ஏற்ப மண் மாதிரி ஆய்வின் முடிவுகளின்படி உரங்கள் இடுவதற்கும், பயிர்த் திட்டம் தயாரிப்பதற்கும் கையடக்கக் கணினி உதவியாக இருக்கும். விவசாயிகளின் வயலில் உள்ள பயிர்களின் பூச்சி நோய் மற்றும் பாதிப்புகளை படமெடுத்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கு

அனுப்பி உடனடியாக வல்லுநர்கள் மூலம் தீர்வு காணவும் இக்கணினி உதவும் என்றார் அவர். முகாமில் 83 வேளாண் உதவி அலுவலர்களுக்கு ரூ.10.11 லட்சம் மதிப்பில் கையடக்கக் கணினி வழங்கப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

அரசு சார்பில் வைக்கோல் விற்பனை கால்நடை வளர்ப்போர் 8,086 பேர் பதிவு

ஈரோடு: கால்நடை துறையில், தமிழக அரசின் வைக்கோல் விற்பனை அமோகமாகவும், விவசாயிகளுக்கு நல்ல பலனை தந்துள்ளதாகவும், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ஜெயராமன் தெரிவித்துள்ளார். கடந்த சில ஆண்டாக தமிழகத்தில் நிலவும் வறட்சியால், கால்நடைகள் வளர்ப்போர், கால்நடை தீவனத்துக்கு சிரமப்படுகின்றனர். தவிர, நெல், சோளத்தட்டை போன்றவைகளை இயந்திரம் மூலம் அறுவடை செய்வதால், அவற்றை கால்நடைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. தவிர, மழையின்மையால், வயல் மற்றும் தோட்டங்களில், புல் மற்றும் இதர செடிகளின் வளர்ச்சியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு சார்பில், பல்வேறு இடங்களில் கால்நடை தீவன விற்பனை, கால்நடைத்துறை மூலம் நடத்தப் படுகிறது. இதன்படி, ஈரோட்டில், வீரப்பன் சத்திரத்தில் கால்நடைகளுக்காக, ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய் என்ற விலையில், விற்பனை செய்யப் படுகிறது. இந்தாண்டு துவங்கம் முதல், இந்த விற்பனை நடந்து வருகிறது. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் இருந்து, கால்நடைத்துறை சார்பில், மொத்தமாக வைக்கோல் கொள்முதல் செய்யப்படுகிறது. அவற்றை, விவசாயி களுக்கு, குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர். இதன்படி, ஈரோடு மாவட்டத்துக்கு, திட்ட மதிப்பீடாக, 60 லட்சம் ரூபாய், வைக்கோல், வாங்குவதற்காக, அரசு ஒதுக்கீடு செய்தது. இந்நிதியில், இதுவரை, 5,650 பயனாளிகள் பயனடைந்துள்ளதாக, கால்நடைத்துறை உதவி இயக்குனர் ஜெயராமன் தெரிவித்தார். மேலும், அவர் கூறியதாவது: மொத்தமாக வைக்கோல்களை வாங்கி ஸ்டாக் வைத்துள்ளோம். இதுவரை, 5,650 பயனாளிகள், பயன் அடைந்துள்ளனர். மேலும், வைக்கோல் தேவை எனக்கூறி, 8,086 நபர்கள், பதிவு செய்து வைத்துள்ளனர். பெருந்துறை, எழுமாத்தூர், நம்பியூர்,

பொலவகாளிபாளையம், பவானி, புஞ்சை புளியம்பட்டி ஆகிய பகுதிகளில், 90 சதவீதம் பயனாளிகள், பயன்பெற்றுள்ளனர். மேலும், புஞ்சை புளியம்பட்டியில், பதிவு செய்துள்ள அனைவருக்கும், இம்மாதம் வைக்கோல்கள் வழங்கப்படும். அங்கு கொடுத்து விட்டால், ஈரோடு மாவட்டம் வைக்கோல் விற்பனை பூர்த்தியாகும். அரசு சார்பில் செயல்படுத்தப்படும், இத்திட்டம், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது, என்றார்.

**<u>மோசூல் அணையை மீட்டது குர்திஷ் படை</u>**

பாக்தாத்:மக்களின் வாழ்வாதாரமாக இருக்கின்ற மோசூல் அணையை ஐ.எஸ். படைகள் வசமிருந்து மீட்பதற்காக அமெரிக்க போர் விமானங்களின் துணையுடன் குர்தீஷ் படையினர் உச்சகட்ட தாக்குதல் நடத்தினர். அணையை சுற்றி முகாமிட்டு இருந்த ஐ.எஸ். போராளிகள் மீது அமெரிக்க போர் விமானங்களின் துணையுடன் நேற்று வான் வழி தாக்குதல் மற்றும் தரைவழி தாக்குதல் நடத்திய குர்திஷ் படையினர், அணையை கைப்பற்றிவிட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தக்காளி விலை கிடுகிடு உயர்வு</u>**



ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் கடந்த சில மாதங்களாக உள்ளூர் தக்காளி வரத்து இல்லாததால், தக்காளி விலை பெட்டிக்கு (14 கிலோ) ரூ.380 என்று விற்கப்பட்டு வந்தது. கடந்த 3 நாட்களாக பெரியகோட்டை பகுதியில் இருந்து உள்ளூர் தக்காளி மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இருந்த போதிலும் தக்காளியின் பயன்பாடு அதிகரித்து கொண்டே போனதால், விலையும் ஏறுமுகமாக காணப்பட்டது. இன்று ஒரு பெட்டி தக்காளியின் விலை

ரூ.40 அதிகரித்து ரூ.420 க்கு விற்றது. தக்காளியின் தேவை குறையாமல் உள்ளதால், விலை குறைய வாய்ப்பில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**<u>வேளாண் பொருட்கள் ஏற்றுமதி 2.7 சதவீதம் சரிவு</u>**



புதுடில்லி:நடப்பு 2014 – 15ம் நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்., – ஜூன்), இந்தியாவின் ஒட்டு மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 2.7 சதவீதம் சரிவடைந்து, 33,649 கோடி ரூபாயாக சரிவடைந்துள்ளது.இது, கடந்த நிதியாண்டின் இதே காலாண்டில், 34,581 கோடி ரூபாயாக அதிகரித்து காணப்பட்டது என, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபெடா) தெரிவித்துள்ளது.பாதிப்பு:குறிப்பாக, மதிப்பீட்டு காலாண்டில், கொத்தவரை ஏற்றுமதி, 50 சதவீதத்திற்கும் மேல் சரிவடைந்து, 4,634 கோடியிலிருந்து, 2,316 கோடி ரூபாயாக வீழ்ச்சி கண்டுள்ளது. இதன் காரணமாகவே ஒட்டு மொத்த ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.இருப்பினும், பாசுமதி அரிசி, நிலக்கடலை, பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது.சவுதி அரேபியா, ஈரான் மற்றும் மேற்கு ஆசியா நாடுகளில், இந்திய நறுமண நீள்வகை பாசுமதி அரிசிக்கான தேவை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இதையடுத்து, அந்நாடுகளுக்கான இதன் ஏற்றுமதி, கணக்கீட்டு காலாண்டில், 8 சதவீதம் உயர்ந்து, 8,400 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலாண்டில், 7,757 கோடி ரூபாயாக இருந்தது. இதே போன்று, சாதாரண வகை அரிசி ஏற்றுமதியும், 3,353 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.கடந்த நிதியாண்டில், ஒட்டு மொத்த அரிசி ஏற்று-

மதி, 40 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது. இதில், பாசுமதி அரிசியின் பங்களிப்பு மட்டும், 28 ஆயிரம் கோடி ரூபாயாகும்.வரவேற்பு:சாதாரண வகை அரிசி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை, கடந்த 2011ம் ஆண்டு விலக்கி கொள்ளப்பட்டதையடுத்து, உலகளவில், அதற்கான தேவை பெருகி வருகிறது. குறிப்பாக, ஆப்ரிக்கா, ஐரோப்பிய நாடுகளில், இந்திய சாதாரண வகை அரிசிக்கு சிறந்த வரவேற்பு காணப்படுகிறது. இதையடுத்து, கடந்த இரண்டு நிதியாண்டுகளில் மட்டும், 1 கோடி டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.மாமிச உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில், மாட்டிறைச்சியின் பங்களிப்பு, 86 சதவீதமாக உள்ளது. இதன் ஏற்றுமதி, மதிப்பீட்டு காலாண்டில், 17 சதவீதம் அதிகரித்து, 4,634 கோடியிலிருந்து, 5,742 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.இவை தவிர, நிலக்கடலை (34 சதவீதம்), கோகோ (144 சதவீதம்), பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் (38 சதவீதம்) ஆகியவை குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளன.அதேசமயம், கோதுமை (24 சதவீதம்), பருப்பு வகைகள் (16 சதவீதம்), பால் பொருட்கள் (19 சதவீதம்) ஆகியவற்றின் ஏற்றுமதி சரிவை கண்டுள்ளது என, ‘அபெடா’ மேலும் தெரிவித்துள்ளது.

## <u>தொடர் மழையால் காட்டாறுகளில் வெள்ளம்</u>

பள்ளிப்பட்டு : ஒரு வாரமாக பெய்துவரும் தொடர் மழை காரணமாக, காட்டாறுகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்கத் துவங்கியுள்ளது. பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை பகுதியில், ஒரு வாரமாக, தினமும் மாலையில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், பாலாபுரம், புல்லூர் உள்ளிட்ட மலைப்பகுதிகளில் இருந்து உருவாகும் காட்டாறுகளில் தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. இதிலிருந்து, ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு தண்ணீர் செல்கிறது. இருப்பினும் கடும் வறட்சியை தொடர்ந்து, தற்போது பெய்து வரும் மழையால், ஏரி, குளங்களுக்கு வரும் நீர், ஓரிரு நாட்களில் வற்றி விடுகிறது. மேலும் மழை தொடரும் பட்சத்தில், குளங்களில் தண்ணீர் தேங்கி நிற்க வாய்ப்பு உள்ளது. இதுவரை தண்ணீர் நிலத்தடியை சென்றடைந்ததால், மண் குளிர்ந்து வெப்பத்தின் தாக்கம் குறைந்துள்ளது. காய்ந்து கிடந்த பயிர்கள் புத்துயிர் பெற்றுள்ளன. நிலக்கடலை வயலில், களை பறிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன.புல்லூர் பகுதி காட்டாறுகளில் பாய்ந்து வரும் வெள்ளத்தால், மான், குரங்கு, காட்டுப்பன்றி உள்ளிட்ட வனவிலங்குகளுக்கும் தண்ணீர் கிடைத்துள்ளது. பள்ளிப்பட்டு வனத்துறை அலுவலகம் அருகே பாய்ந்து செல்லும், காட்டாற்றில் குரங்குகள், கும்மாளம் போட்டு வருகின்றன.

**<u>சிறு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்</u>**

விழுப்புரம்: மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. விழுப்புரம் மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம், கலெக்டர் அலுலகத்தில் நடந்தது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் துபே, திட்ட ஆலோசகர்கள் கண்ணன், நாராயணன் ஆகியோர் சிறு விவசாயிகள் வேளாண் கூட்டமைப்பு திட்டம் குறித்து விளக்கம் அளித்தனர். இதில் வேளாண்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் வங்கி அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்கல்</u>**

ராசிபுரம்: அத்தனூர் இந்தியன் வங்கி கிளை சார்பில், விவசாயிகளுக்கு குறுகியகால பயிர்கடன் வழங்கப்பட்டது. ராசிபுரம் அடுத்த, அத்தனூர் இந்தியன் வங்கி கிளை சார்பில், குறுகியகால பயிர்கடன் வழங்கும் விழா மற்றும் விவசாய வல்லுநர்கள் சந்திப்பு நிகழ்ச்சி, அத்தனூரில் நடந்தது. வங்கி கிளை மேலாளர் முருகேசன் தலைமை வகித்தார். சேலம் மண்டல துணைப் பொதுமேலாளர் தங்கவேல், விவசாயிகளுக்கு கடன் அட்டை வழங்கினார். நபார்டு வங்கி பொதுமேலாளர் பூவராகவன், வெண்ணந்தூர் வேளாண் உதவி இயக்குனர் சீனிவாசன், வெண்ணந்தூர் பி.டி.ஓ., குணசேகரன், அத்தனூர் டவுன் பஞ்சாயத்து தலைவர் ராமதாஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**<u>கிழக்குக்கரை வாய்க்காலுக்கு வரவேற்பு நெல் சாகுபடிக்கு விவசாயிகள் ஆயத்தம்</u>**

பள்ளிபாளையம்: மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், நேற்று பள்ளிபாளையம் பகுதிக்கு வாய்க்கால் தண்ணீர் வந்ததால், அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் வரவேற்று, நெல் சாகுபடி செய்வதற்கான பணிகளை துவங்க ஆயத்தமாகி வருகின்றனர். சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து, கடந்த, 15ம் தேதி, மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்காலில்

தண்ணீர் திறக்கப்பட்டது. அதையடுத்து, இரண்டு நாட்களுக்கு பின்னர், நேற்று மாலை, 5 மணிக்கு பள்ளிபாளையம் அடுத்த எலந்தகுட்டை பகுதிக்கு, மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்காலில், மெல்ல ஊர்ந்து வந்தது தண்ணீர். அதனால், அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கடந்தாண்டு, டிசம்பர் மாதத்திற்கு பின், எட்டு மாதம் கழித்து தற்போது தான், வாய்க்காலில் தண்ணீர் வந்துள்ளதால், விவசாயிகள் அடுத்தக்கட்ட பணிகளை துவங்க ஆயத்தமாகி வருகின்றனர். தற்போது, தண்ணீர் வரத்தால், பள்ளிபாளையம் சுற்று வட்டாரப் பகுதியில், 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பாசன வசதி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கலியனூர், சமயசங்கிலி, வீரப்பம்பாளையம், தட்டாங்குட்டை, எலந்தக்குட்டை, சின்னகரைபாளையம், ஆலம்பாளையம், புதுப்பாளையம் உள்ளிட்ட பகுதி விவசாயிகள், ஒரு போக நெல் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். வரும், 137 நாட்களுக்கு தண்ணீர் வரும் என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவிப்பதால், கால்நடை வளர்ப்பு, நீராதாரம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வாய்க்காலில் தண்ணீர் தவழ்ந்து வந்ததை, அப்பகுதி மக்கள் வரவேற்க, பூக்களை தண்ணீரில் போட்டு வரவேற்றனர். சிலர், வாய்க்காலில் இறங்கி, குடும்பத்துடன் வழிபாடு செய்தனர். மொத்தத்தில், தற்போது திறக்கப்பட்ட தண்ணீரால், ஒரு போகம் நெல் சாகுபடி செய்ய முடியும் என, விவசாயிகள் நம்பிக்கையுடன் தெரிவித்தனர். மேட்டூரில் இருந்து கால்வாயில் திறந்து விடப்பட்ட தண்ணீர், பள்ளிபாளையம் அடுத்த மேட்டூர் கிழக்குக்கரை கால்வாயில் நேற்று மாலை வந்தடைந்தது. தண்ணீரை வரவை அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொது மக்கள் சிறப்பு பூஜை செய்து வரவேற்றனர்.

**<u>ஆறு புதிய கால்நடை மருந்தகம் ரூ. 1.26 கோடியில் பூமி பூஜை</u>**

நாமக்கல்: கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில், 1.26 கோடி ரூபாய் செலவில், ஆறு புதிய கால்நடை மருந்தகம் கட்டுவதற்கான பூமி பூஜை போடப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில், ஆறு இடங்களில் கால்நடை மருந்தகங்களுக்கான புதிய கட்டிடத்திற்கான பூமி பூஜை நடந்தது. மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கமணி, திருச்செங்கோடு தாலுகாவிற்கு உட்பட்ட தோக்கவாடி அடுத்த பழையபாளையம், ஓ.ராஜாபாளையம் அடுத்த கோழிக்கால்நத்தம், மல்லசமுத்திரம் அடுத்த ராமாபுரம், மொஞ்சனூர், நாமக்கல் அடுத்த பழையபாளையம், எருமப்பட்டி

அடுத்த வடுகப்பட்டி ஆகிய ஆறு இடங்களில், பூமி பூஜையை துவக்கி வைத்தார். நபார்டு திட்டத்தின் கீழ், தலா, 21 லட்சம் ரூபாய் வீதம், 1.26 கோடி ரூபாயில், புதியதாக கால்நடை மருந்தகம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதைதொடர்ந்து, தண்ணீர்பந்தல்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில், ஏழு லட்சம் ரூபாய் மதிப்பில், சமையலறை கட்டிடம், 55 லட்சம் ரூபாய் மதிப்பில், திருச்செங்கோட்டில், சார்நிலைக் கருவூலம் திறக்கப்பட்டது. திருச்செங்கோடு ஆர்.டி.ஓ., செங்கோட்டையன், யூனியன் சேர்மன்கள் பாலசுப்ரமணியம், மோகன், இணை இயக்குனர் மோகன்ராஜ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தொல்காப்பியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## உழவர் பணி கூட்டுறவு சங்க பேரவை கூட்டம்

நாமக்கல்: பள்ளிபாளையம் உழவர் பணிக் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் நடந்த பேரவைக் கூட்டத்தில், உறுப்பினர்களுக்கு, 50 லட்சம் மதிப்பில், கடன்வசதி செய்து கொடுக்கப்பட்டது. நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் உழவர் பணிக் கூட்டுறவு சங்கத்தின் பேரவைக் கூட்டம் நடந்தது. சங்கத் தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்தார். கடந்த, 2012-13ம் நிதியாண்டின் தணிக்கை அறிக்கை வாசிக்கப்பட்டு, சங்கம் ஈட்டிய லாப தொகை, இரண்டு கோடியை, உறுப்பினர் களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது. மேலும், உறுப்பினர் செலுத்திய பங்கு தொகைக்கு, 14 சதவீதம் ஈவு தொகை வழங்கப்பட்டது. சங்கத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு, பங்கு தொகை செலுத்தாத, "அ' பிரிவு உறுப்பினர்களை நீக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கமணி பங்கேற்று, உறுப்பினர்களுக்கு, 50 லட்சம் மதிப்பிலான கடன்களை வழங்கினார். துணைப்பதிவாளர் அருளரசு, துணைத் தலைவர் தனசேகரன், இயக்குனர்கள் ஆறுமுகச்சாமி, சிவக்குமார், பத்மாவதி, கோமதி, மகாதேவன், விஜயலட்சுமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## நெல் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அறிவிப்பு

நாமக்கல்: திருந்திய நெல் சாகுபடியில், மாநில அளவில் அதிக உற்பத்தித் திறன் எடுக்கும் விவசாயிக்கு, ஐந்து லட்சம் ஊக்கத்தொகை மற்றும் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி

வெளியிட்ட அறிக்கை: தமிழக விவசாயிகளில், மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அதிக மகசூலுடன், உற்பத்தி செய்த விவசாயிக்கு ஊக்கப்பரிசாக, ஐந்து லட்சம் ரூபாய் மற்றும் 3,500 ரூபாய் மதிப்பில், பதக்கம் ஆகியன, வரும் குடியரசு தினத்தில் வழங்கப்படும். போட்டியில் பங்கேற்கும் விவசாயிகள், குறைந்தபட்சம், 50 சென்ட் நிலம் வைத்திருக்க வேண்டும். நில உரிமையாளர் மற்றும் குத்தகையாளர் பங்கேற்கலாம். அதற்காக, பதிவுக்கட்டணமாக, 150 ரூபாய் செலுத்த வேண்டும். போட்டியில் பங்கேற்க விரும்புவோர், நெல் அறுவடை செய்வதற்கு, 15 நாட்களுக்கு முன்னதாக, சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனரிடம் தெரிவிக்க வேண்டும். பதிவுக்கட்டணம் திருப்பி வழங்கமாட்டாது. மேலும், விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க மைய, வேளாண் உதவி இயக்குனரை சந்தித்து ஆலோசனைகளை பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>மண் பரிசோதனைக்கு இன்று முதல் முகாம்</u>

பெரம்பலூர்: குளத்தூரில், நடமாடும் மண் ஆய்வு கூட வாகனத்தின் மூலம் மண் பரிசோதனை முகாம் நடந்தது. முகாமை, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது பார்வையிட்டு கூறியதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாய நிலங்களில் மண், நவீன நடமாடும் வாகனத்தின் மூலம் பரிசோதனை செய்யப்படுகிறது. இதுவரை நடந்த நடமாடும் மண் பரிசோதனை ஆய்வு முகாம் மூலம், 8,500 விவசாயிகள் மண் மாதிரிகளை ஆய்வு செய்து பயனடைந்துள்ளனர். மண் மாதிரி ஆய்வு செய்வதன் மூலம், விவசாய நிலம் மற்றும் பயிருக்கு ஏற்ப சரியான உர அளவை தெரிந்து கொண்டு, அதற்கேற்ப உரமிட முடியும். இதனால், விவசாயிகளுக்கு உரச்செலவு குறைவதுடன் மண்ணின் வளமும் காக்கப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள, நான்கு யூனியன் பகுதிகளிலும் நடமாடும் வாகனத்தின் மூலம் மண் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. 18ம் தேதி (இன்று)பென்னக்கோணம், 19ம் தேதி எழுமூர், 20ம் தேதி வேப்பர், 21ம் தேதி அகரம்சீகூர், 25ம் தேதி பிரம்மதேசம், 26ம் தேதி காரியனூர், 27ம் தேதி வி.களத்தூர், 28ம் தேதி உடும்பியம் ஆகிய ஊர்களில் நடமாடும் மண் பரிசோதனை

வாகனத்தின் மூலம் மண் பரிசோதனை முகாம் நடக்க உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## <u>டெல்டாவில் தொடர் மழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>

தஞ்சாவூர்: கல்லணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்கு, கடந்த, 14ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில், பரவலாக மழை பெய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில், நேற்று முன்தினம் இரவு, மழை கொட்டித்தீர்த்து. இதனால், பல வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால், தஞ்சை மருத்துவகல்லூரியின் பின்புறம் உள்ள சுற்று சுவர் இடிந்து விழுந்தது. நேற்று காலை வரை, தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவு மீ.மீ.,யில் வருமாறு: கும்பகோணம்- 47, பாபநாசம்- 48, தஞ்சாவூர்- 73.80, திருவையாறு- 20.60, திருக்காட்டுப்பள்ளி- 16.20, வல்லம்- 96, அய்யம்பேட்டை- 28, ஈசன்விடுதி- 33, திருவிடைமருதூர்- 32.40, மஞ்சளாறு- 31.60, நெய்வாசல் தென்பாதி- 47.60, பேரவூரணி- 48.40, பூதலூர்- 31.20, வெட்டிக்காடு- 78.40, மதுக்கூர்- 59.20, பட்டுக்கோட்டை- 32, அதிராமபட்டிணம்- 26.60, ஒரத்தநாடு- 17.20, குருங்குளம்- 13 லோவர் அணைகட்டு- 19. டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>வேளாண் அறிவியல் மையத்தில் நுண்ணூட்ட கலவை விற்பனை</u>

திண்டுக்கல் : விவசாயிகளுக்கு காந்திகிராமம் வேளாண் அறிவியல் மையத்தில் நுண்ணூட்டகலவை விற்பனை செய்யப்படுகிறது. தென் மாவட்டங்களில் தக்காளி, வெங்காயம், கத்தரி, மிளகாய் போன்ற காய்கறிகள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. காய்கறிகளில் ஊட்டசத்து குறைபாடால், 20 சதவீத மகசூல் குறைகிறது. ஊட்டச்சத்து குறைபாட்டை தவிர்க்க பெங்களூரு இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தில் காய்கறி நுண்ணூட்ட கலவையை விற்பனை செய்யப்படுகிறது. அங்கு நேரில் செல்லும் விவசாயிகளுக்கு மட்டுமே நுண்ணூட்ட கலவை வழங்கப்படுகிறது. விவசாயிகள் அலைவதை தவிர்க்க காந்திகிராமம் வேளாண் அறிவியல் மையத்தில் காய்கறி நுண்ணூட்ட கலவை தயாரித்து மானிய விலையில் விற்கப்படுகிறது. இந்த கலவையில், போரான்,

துத்தநாகம், மாங்கனீசு, இரும்பு, தாமிரம், பெர்ரஸ் போன்ற நுண்ணூட்ட சத்துக்கள் அடங்கியுள்ளன. விதைத்த 30 நாட்களில் இருந்து 45 நாட்கள் வரை இலைவழியாக நுண்ணூட்ட கலவையை தெளிக்கலாம். வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறுகையில், ""பயிர்களுக்கு தகுந்த நுண்ணூட்ட கலவையை தயாரித்து வழங்குகிறோம். நுண்ணூட்ட கலவையால், மகசூல் அதிகரிக்கும்," என்றார்.

## விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்

தேனி : உத்தமபாளையம் அருகே ராயப்பன்பட்டியில் விவசாய தொழில்நுட்ப கல்லூரி குள்ளப்புரம் மாணவிகள் அனாராஜ், ஆட்லின், காவியா, தனலட்சுமி, பிரியங்கா, கரீஷ்மாமது, அறிவுமதி, மணிமாலா, வினிதா ஆகியோர் கிராமத்தங்கல் திட்டத்தின் கீழ், தென்னை ஊட்டச்சத்து டானிக் செயல்முறை விளக்கம் அளித்தனர். படையல் தென்னை விவசாயத்தலைவர் சூசைமணி, ஊராட்சி துணை தலைவர் மகாராஜன் மற்றும் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். இந்த செயல்முறைகளை ஐந்து முறையில் விவசாயிகள் செய்து காட்டினர். மாணவிகள் தென்னை ஊட்டச்சத்து டானிக் பயன்படுத்தும் முறைகள், வேர்வழி ஊட்டத்தின் பயன்கள் பற்றிய தகவல்களை விவசாயிகளுக்கு அளித்தனர்.

## காரைக்குடியில் கனமழை; வீடுகளில் புகுந்த மழைநீர்

காரைக்குடி : காரைக்குடியில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால், வீடுகளில் வெள்ள நீர் புகுந்தது. கடந்த சில ஆண்டுகளாக கடும் வறட்சி நிலவிய காரைக்குடியில், கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை 5.30 மணி முதல் 6 மணி வரை மழை பெய்தது. அதை தொடர்ந்து இரவு 7.20 மணிக்கு ஆரம்பித்த மழை, நள்ளிரவு 12 மணி வரை நீடித்தது. வரத்துக்கால்வாய் ஆக்கிரமிப்பாலும், கால்வாய் சரிவர தூர்வாரப் படாததாலும்,ரோடுகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பல லட்சம் செலவில் போடப்பட்ட ரோடு துண்டிக்கப்பட்டது.ஆறுமுகநகர் பகுதியிலிருந்து வரும் தண்ணீர் செல்லும் கால்வாய் தனியார் ஆக்கிரமிப்பால் மூடப்பட்டதால், அப்பகுதி ரோட்டிலும்,குடியிருப்பிலும், தண்ணீர் தேங்கியது.

செக்காலை முதல் வீதியிலிருந்து, ஆறுமுக நகர், பெரியார்நகர் பகுதிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஓ.சிறுவயல் காட்டு பகுதி வெள்ள நீர், குப்பச்சி ஊரணி பின்புறம் வரும் வெள்ள நீர், கோவிலூர் கோனேரி கண்மாய் பகுதி நீர், காரைக்குடி அதலைக் கண்மாய்க்கு வந்து சேர்ந்தது. அதலை கண்மாயிலிருந்து, காரைக்குடி கண்மாய்க்கு செல்லும் படுகை அணை, அடைக்கப்பட்டிருந்ததால், தண்ணீர் கண்மாயிலிருந்து வெளியேறி, காந்திபுரம் ஒன்றாவது வீதியில் வீடுகளில் புகுந்தது. மாதா நிலைய இறக்கம் பகுதி வீடுகளில் தண்ணீர் புகுந்ததால், பொதுமக்கள் கட்டிலில் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

## விருதுநகரில் மழை; வீடுகளில் புகுந்த நீர்

விருதுநகர் : ஆக்கிரமிப்பால், மழை நீர் செல்லும் 30 அடி ஓடை 3 அடியாக சுருங்கியதால், மழைநீர் வெளியேற வழியில்லாமல், விருதுநகரில் கொட்டிய மழையால்,என்.ஜி.ஓ. காலனி பகுதி வீடுகளில் நீர் புகுந்தது. விருதுநகரில் கடந்த மூன்று நாட்களாக, மாலையில் மழை கொட்டி வருகிறது.இதனால் பள்ளங்களில் மழை நீர் தேங்கி காணப்படுகிறது.ஓடைகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கண்மாய் உள்ளிட்ட நீர் நிலைகளில் ஓரளவு தண்ணீர் தேங்கி காணப்படுகிறது.விருதுநகர் சத்திர ரெட்டியபட்டி வயல் பகுதியில் பெய்யும் மழை நீர் வழிந்தோடுவதற்காக, என்.ஜி.ஓ., காலனி பகுதியில் 30 அடி அகலத்தில் ஓடை இருந்துள்ளது. இது நான்கு வழி சாலை மற்றும் சர்வீஸ் ரோடு அமைப்பதற்காக, ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. இதேபோல் புதிதாக வீடுகள் தோன்றியதால், அதிலும் ஓடை ஆக்கிரமிக்கப்பட்டது. இதன் காரணமாக 30 அடி ஓடை மூன்று அடியாக சுருங்கி விட்டது. விருதுநகரில் தற்போது பெய்த மழையால், மழை நீர் ஓடையில் செல்ல வழியில்லாததால், விருதுநகர் என்.ஜி.ஓ., காலனி பகுதி விவேகானந்தர் தெரு, காந்தி தெரு, விநாயகர் கோயில் பகுதி வீடுகளில் புகுந்தது. இதை தொடர்ந்து, நேற்று ஊராட்சி பணியாளர்களால் ஆக்கிரமிப்பு ஓடையின் அடைப்பை சரி செய்த நிலையில், தண்ணீர் வெளியேறியது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**செப்டம்பரில் வினியோகிக்க தமிழகத்தில் 1.45 கோடி லிட்டர் பாமாயில் கொள்முதல்**




கோவை: தமிழகத்தில், 33,624 ரேஷன் கடைகள் செயல்படுகிறது. மாநில அளவில் 46 நுகர்பொருள் வாணிப கழக குடோன் மூலமாக ரேஷன் கடைகளுக்கு தேவையான அரிசி, உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, சர்க்கரை, கோதுமை, பாமாயில் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. பருப்பு வகைகள் டெண்டர் விடப்பட்டு மாதந்தோறும் பெறப்படுகிறது. பாமாயில் பாக்கெட்டுகளை மத்திய அரசின் மானியம் மூலமாக கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. இந்தியாவில் பாமாயில் உற்பத்தி மிகவும் குறைவாக இருப்பதால் இந்தோனேசியா உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழக ரேஷன் கடைகளுக்கு கடந்த சில ஆண்டுகளாக போதுமான அளவு பாமாயில் கிடைக்கவில்லை. 50 முதல் 80 சதவீத ரேஷன் கார்டுகளுக்கு மட்டுமே பாமாயில் கிடைக்கிறது. பாமாயில் கொள்முதலை அதிகரிக்க, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் டெண்டர் விடப்பட்டது. இதில் ஸீ84.81 கோடி செலவில் 1.45 கோடி லிட்டர் பாமாயில் பாக்கெட் பெறப்படவுள்ளது. அடுத்த

மாதத்திற்கு மட்டும் இந்த பாமாயில் பயன்படும். ஸீ77.85 கோடி மதிப்பில் 15,000 டன் துவரம்பருப்பு, ஸீ52.40 கோடி செலவில் 8000 டன் உளுத்தம்பருப்பு பெறவும் வாணிப கழகத்தினர் முடிவு செய்துள்ளனர். துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் அடுத்த மாதம் முதல் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு கூடுதலாக தலா 5,000 டன் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 21 ஆயிரம் கன அடியாக உயர்வு</u>**




மேட்டூர்: மேட்டூர் அணைக஁கு நீர்வரத்து விநாடிக்கு 21 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை நீடித்து வருகிறது. அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகள் ஏற்கனவே நிரம்பிய நிலையில் உள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி நீர் வரத்துக஁கு ஏற்ப உபரி நீர் திறப்பு அதிகரிக஁கப்படுகிறது. இதனால் கடந்த 3 நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர் வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. மேட்டூர் அணைக஁கு நேற்று முன்தினம் விநாடிக஁கு 19,363 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை நிலவரப்படி விநாடிக஁கு 21,084 கனஅடியாக அதிகரித்துள்ளது. பாசனத்திற்கு தண்ணீர் திறக஁கப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம்மெதுவாகஉயர்ந்துவருகிறது. அணையிலிருந்து காவிரி டெல்டா மற்றும் கிழக்கு-மேற்கு கால்வாய் பாசனத்திற்கும் விநாடிக஁கு 12,496 கனஅடி வீதம் நீர்

திறகக்கப்படுகிறது. தற்போது அணையின் நீர்மட்டம் 112.70 அடி. நீர் இருப்பு 82.30 டி.எம்.சி. நீர்வரத்து தொடர்ந்து இதே அளவுக்கு இருக்கும் பட்சத்தில், இன்னும் 2 வாரங்களில் மேட்டூர் அணை நிரம்பும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

**பூண்டியில் இருந்து திறப்பு புழல் ஏரிக்கு கிருஷ்ணாநீர் வந்தது**




புழல்: சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் ஒன்றான புழலேரி மொத்த கொள்ளளவு 3,300 மில்லியன் கன அடி. தற்போது ஏரியில் 743 மி.கன அடி நீர் உள்ளது. இதில் சென்னை குடிநீருக்காக 120 கன அடி வீதம் திறக்கப்படுகிறது. இந்நிலையில் சில தினங்களுக்கு முன்பு கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா நீர் திறந்துவிடப்பட்டது. அந்த தண்ணீர் பூண்டி ஏரிக்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நீர், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் புழல் ஏரிக்கு 120 கன அடி வீதம் வருகிறது. பூண்டியில் இருந்து சிறு கடல், திருவள்ளூர் பாக்கம், பாலவேடு, வெள்ளானூர், திருமுல்லைவாயல் வரை உள்ள கால்வாய் மூலம் கிருஷ்ணா நீர், புழலேரி வருகிறது. கடந்தாண்டு இதே தேதியில் புழலேரியில் 428 மில்லியன் கன அடி நீர் மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது.

**ஐஓபி சார்பில் பால் பண்ணை அமைத்தல் இளையோருக்கு இலவச பயிற்சி**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை ஐஓபி கிராமிய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில் கறவை மாடுகள் மற்றும் பால் பண்ணை அமைத்தல் குறித்த 6

நாள் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில் புதுக்கோட்டை கிராமப்புறத்தைச் சேர்ந்த படித்த வேலை இல்லாத ஆண் மற்றும் பெண்கள் கலந்துகொள்ளலாம். தினசரி இலவச மதிய உணவு மற்றும் படிப்பதற்கான குறிப்பு புத்தகங்களுடன் தரமான பயிற்சியாளர்களைக் கொண்டு அளிக்கப்படும் இந்த பயிற்சியின் முடிவில் பயிற்சி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படும். 18 வயது முதல் 35 வயதிற்குள் உள்ள கிராமப்புற ஆண்கள் மற்றும் பெண்கள் 3 பாஸ்போர்ட் சைஸ் புகைப்பட நகல்களோடு மாற்றுச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை நகல்களையும் இணைத்து அவரவர் தம்முடைய செல்போன் எண்ணையும் குறிப்பிட்டு வரும் 22ம் தேதிக்கு முன்பாக நேரில் வந்து விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு நிலைய இயக்குநர், ஐஓபி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம், 15062 மேல 4ம் வீதி, திலகர் திடல், புதுக்கோட்டை- 622001 என்ற முகவரியிலும் 04322-225339 என்ற போன் எண்ணிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இத்தகவலை புதுக் கோட்டை ஐஓபி கிராமிய வேலை வாய்ப்பு பயிற்சி நிலைய நிறுவன இயக்குநர் ரமேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**குடுமியான்மலையில் அமையவுள்ள வேளாண் கல்லூரிக்கு ஜ்.50 கோடி நிதி ஒதுக்கீடுகலெக்டர் தகவல்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு முதற்கட்டமாக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார். அன்னவாசல் ஒன்றியம் குடுமியான்மலை மாநில வேளாண் விரிவாக்க மையம் (ஸ்டாமின்) அரங்கில் புதிதாக வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளதையொட்டி அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தினை துவக்கி வைத்து கலெக்டர் மனோகரன் பேசியதாவது: தமிழ்நாட்டில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் புதுக்கோட்டை, தஞ்சை, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அமைக்க ரூ.150 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக தமிழக அரசு நிதிஒதுக்கீடு செய்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டததில் குடுமியான்மலையில் இந்த வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.50 கோடியை முதற்கட்டமாக தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கல்லூரியில் 90 மாணவர்கள்

சேர்க்கைக்கு அரசு அனுமதி வழங்கி நடப்பாண்டு முதல் வகுப்புகள் நடைபெற உள்ளது. இதன் வகுப்புகள் தற்காலிகமாக விவசாயப் பண்ணையில் உள்ள கட்டிடங்களில் நடைபெறும். மேலும், புதிதாக அமையவுள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அறிஞர் அண்ணா விவசாயப் பண்ணையில் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். மேலும் கலெக்டர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ள இடத்தினை தேர்வு செய்வதற்கு உரிய ஆய்வு நேற்று (13ம் தேதி) தொடர்புடைய அலுவலர்களுடன் மேற்கொண்டார். இதற்கு தேர்வு செய்யப்படும் இடம் விரைவில் கண்டறியப்பட்டு அரசுக்கு உரிய கருத்துரு அனுப்பப்படும் என்றும், இதன் மூலம் கல்லூரி அமைப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைளும் வருவாய்த்துறை, வேளாண், தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் கலெக்டர் தெரிவித்தார். பின்னர் கறம்பக்குடியில் புதிய தாலுகா அலுவலகம் அமையவுள்ள இடத்தினை கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது டிஆர்ஓ., மாரிமுத்து, ஆர்.டி.ஓ. ராஜாராமன், பூமி, வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான், துணை இயக்குநர்கள், ஒன்றியக்குழுத் தலைவர் கெங்கையம்மாள், தாசில்தார் சங்கர், திருமலை, வேளாண்மை அறிவியல் நிலைய முதல்வர் கஜேந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**<u>நாட்டுப்புற கோழி வளர்ப்பு திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் கலெக்டர் தகவல்</u>**

நாகர்கோவில், : நாட்டுப்புற கோழி வளர்ப்பு திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் (பொறுப்பு) உதயகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: குமரி மாவட்டத்தில் நாட்டு கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் 160 அலகுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டு கோழி வளர்ப்பில் விருப்பம் உள்ள மற்றும் ஆர்வம் உள்ள விவசாயி கள் கால்நடை வளர்ப் போர் விண்ணப்பிக்கலாம். நாட்டு கோழி வளர்ப்பு திட்டம் நபார்டு வங்கியுடன் இணைந்து செயல் படுத்தப்படும் திட்டம் ஆகும். 250 நாட்டுப்புற கோழிகளை ஒரு அலகாக கொண்டு வளர்த்திட ஆகும் மொத்த செலவு ரூ.1 லட்சத்து 17 ஆயிரம் ஆகும். இதில் தமிழக அரசு 25 சதவீதம் முதல் தவணை மானியமாக வழங்கும் தொகை ரூ.29 ஆயிரத்து 250 ஆகும். பின்னர் இரு தவணைகளில் ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை யாக வழங்கப்படும்.

மேலும் நபார்டு வங்கியின் 25 சதவீத மானிய தொகை இந்த திட்டத்தின் இறுதியில் வழங்கப்படும். இந்த நாட்டு கோழி வளர்ப்பு திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் மற்றும் கோழி வளர்ப்போர் தங்களது அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி விண்ணப்பம் சமர்ப்பித்து பயன்பெறலாம். நாட்டுக்கோழி வளர்ப்பு திட்ட பயனாளிகள் ஒரு முறை மட்டுமே பயன்பெற இயலும். கடந்த ஆண்டுகளில் பயன்பெற்றவர்கள் இப்போது விண்ணப்பிக்க இயலாது. இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கொப்பரை விலை தொடர்ந்து உயர்வு</u>**

கோபி, : கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் தொடர்ந்து கொப்பரை விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர். கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடக்கும் ஏல விற்பனையில் கோபி, பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், டி.என்.பாளையம், ஆயிபாளையம், வெட்டையம்பாளையம், குருமந்தூர், கரட்டுப்பாளையம், நம்பியூர், நடுப்பாளையம், காராப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் கலந்து கொள்வது வழக்கம். இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்த வாரம் 244 மூட்டை கொப்பரை வரத்து இருந்து நிலையில் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.116.10க்கும், குறைந்தபட்சமாக ரூ.110.10க்கும், சராசரியாக ரூ.114.55க்கும் விலை போனது. மொத்தம் கொப்பரை ரூ.13 லட்சத்து 43 ஆயிரத்து 699க்கு விலை போனது. அதே நேரத்தில் கடந்த வாரம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.112.26க்கும், குறைந்தபட்சமாக ரூ.108.59 க்கும் சராசரியாக ரூ.110.42க்கும் விலை போனது. 231 மூட்டை கொப்பரை ரூ.12 லட்சத்து 60 ஆயிரத்துக்கு விலை போனது. இதுகுறித்து கோபி ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் கூறும்போது, 'கோபி மற்றும் அதைச்சுற்றி உள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக கோயில் திருவிழாவுடன், மழையும் பெய்துவருவதால் கொப்பரை வரத்து கணிசமாக குறைந்துள்ளது. இதன் காரணமாக விலையும் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து உயர்ந்து வருகிறது' என்றார். கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கல்லணையில் தண்ணீர் திறந்ததால்

கும்பகோணம் காவிரி ஆற்றில் பாலக்கரை தரைப்பாலம் அகற்றம் கும்பகோணம், : காவிரியில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், கும்பகோணம் காவிரி ஆற்றில் பாலக்கரையில் உள்ள தற்காலிக தரைப்பாலம் அகற்றப்பட்டது. எனவே பொதுமக்கள் அரசினர் ஆடவர் கல்லூரி வழியாக நடந்து செல்லஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. 1880ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கும்பகோணம் நகரின் வடக்குப் பகுதியில் ஓடும் காவிரி ஆற்றின் குறுக்கே 70 மீட்டர் நீளத்திலும், 15 மீட்டர் அகலத்திலும் 5 கண்மாய்களுடன் பாலம் கட்டப்பட்டது. இந்த பாலம் கட்டப்பட்டதையடுத்து அப்பகுதி பழைய பாலக்கரை என அழைக்கப்பட்டது. இந்த பாலத்தின் வழியாக கும்பகோணத் திலிருந்து சென்னை, நீலத்தநல்லூர் மதனத்தூர், சுவாமிமலை ஆகிய பகுதிகளுக்கு பேருந்துகள் சென்று வந்தது. கும்ப கோணம் நகரின் வடக்குப் பகுதி விரிவாக்கம் அடைந்த தும் பெருமாண்டியையும், கும்பகோணம் நகரையும் இணைக்கும் முக்கிய பால மாக பாலக்கரை காவிரி ஆற்றுப்பாலம் திகழ்ந்தது. கும்பகோணத்திலிருந்து வெளியூருக்கு செல்ல போக்குவரத்துக்கு முக்கியமான பாலமாக கருதப்பட்ட இந்த பாலத்தின் அடியில் கடந்த 2012 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் தேதி விரிசல் ஏற்பட்டதையடுத்து பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால் இப்பாலம் வழி யாக இயக்கப்பட்ட பேருந்துகள் அனைத்தும் மாற்றுப்பாதையில் இயக்கப்படுகிறது.இதைத் தொடர்ந்து புதிய பாலம் கட்டித்தர வேண்டும் என கும்ப கோணம் பகுதி மக்கள் விடுத்த கோரி க்கையை ஏற்று தமிழக அரசு ரூ. 5.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இதையடுத்து காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாத போதே புதிய பாலம் கட்டுவதற்காக பணிகள் நெடுஞ்சாலைதுறையினரால் தொடங்கப்பட்டு வரும் மார்ச் 2015 க்குள் நிறைவு பெறும் வகை யில் போர்க்கால அடிப்படையில் பாலப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் புதிய பாலம் கட்டும் இடத்தின் அருகே தற்காலிகமாக தரைப்பாலம் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்டிருந்தது. இந்த பாலத்தின் வழியாக இரு சக்கர வாகனங்களும், பொதுமக்கள் நடந்தும் சென்று வந்தனர்.இதற்கிடையில் நேற்றுமுன்தினம் காவிரியில் பாசனத்திற்கு கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், தற்காலிக தரைப்பாலத்தை நெடுஞ்சாலைத்துறையினர் இரவோடு இரவாக அகற்றினர். இதுகுறித்து

நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்ட பொறியாளர் நிர்மலா கூறுகையில், காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டதால் பாசனத்திற்கு தண்ணீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவாக பாலக்கரை பாலம் கட்டும் பணிக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மாற்றுப்பாதை அகற்றப்படுகிறது. இதன் வழியாக சென்ற இரு சக்கர வாகனங்கள் மேலக்காவேரி பாலம் வழியாகவும், நடந்து செல்பவர்கள் அரசு ஆடவர் கல்லூரியின் நடைபாலம் வழியாக காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அனுமதிக்கப்பட உள்ளனர் என தெரிவித்துள்ளார்.கும்பகோணம், : காவிரியில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், கும்பகோணம் காவிரி ஆற்றில் பாலக்கரையில் உள்ள தற்காலிக தரைப்பாலம் அகற்றப்பட்டது. எனவே பொதுமக்கள் அரசினர் ஆடவர் கல்லூரி வழியாக நடந்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.1880ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கும்பகோணம் நகரின் வடக்குப் பகுதியில் ஓடும் காவிரி ஆற்றின் குறுக்கே 70 மீட்டர் நீளத்திலும், 15 மீட்டர் அகலத்திலும் 5 கண்மாய்களுடன் பாலம் கட்டப்பட்டது. இந்த பாலம் கட்டப்பட்டதையடுத்து அப்பகுதி பழைய பாலக்கரை என அழைக்கப்பட்டது. இந்த பாலத்தின் வழியாக கும்பகோணத்திலிருந்து சென்னை, நீலத்தநல்லூர் மதனத்தூர், சுவாமிமலை ஆகிய பகுதிகளுக்கு பேருந்துகள் சென்று வந்தது. கும்ப கோணம் நகரின் வடக்குப் பகுதி விரிவாக்கம் அடைந்த தும் பெருமாண்டியையும், கும்பகோணம் நகரையும் இணைக்கும் முக்கிய பால மாக பாலக்கரை காவிரி ஆற்றுப்பாலம் திகழ்ந்தது. கும்பகோணத்திலிருந்து வெளியூருக்கு செல்ல போக்குவரத்துக்கு முக்கியமான பாலமாக கருதப்பட்ட இந்த பாலத்தின் அடியில் கடந்த 2012 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் தேதி விரிசல் ஏற்பட்டதையடுத்து பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால் இப்பாலம் வழி யாக இயக்கப்பட்ட பேருந்துகள் அனைத்தும் மாற்றுப்பாதையில் இயக்கப்படுகிறது.இதைத் தொடர்ந்து புதிய பாலம் கட்டித்தர வேண்டும் என கும்ப கோணம் பகுதி மக்கள் விடுத்த கோரி க்கையை ஏற்று தமிழக அரசு ரூ. 5.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இதையடுத்து காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாத போதே புதிய பாலம் கட்டுவதற்காக பணிகள் நெடுஞ்சாலைதுறையினரால் தொடங்கப்பட்டு வரும் மார்ச் 2015 க்குள் நிறைவு பெறும் வகை யில் போர்க்கால அடிப்படையில் பாலப்பணிகள் நடை பெற்று வருகிறது. இந்நிலையில் புதிய பாலம் கட்டும் இடத்தின் அருகே தற்காலிகமாக தரைப்பாலம் பொதுமக்கள்

பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்டிருந்தது. இந்த பாலத்தின் வழியாக இரு சக்கர வாகனங்களும், பொதுமக்கள் நடந்தும் சென்று வந்தனர்.இதற்கிடையில் நேற்றுமுன்தினம் காவிரியில் பாசனத்திற்கு கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், தற்காலிக தரைப்பாலத்தை நெடுஞ்சாலைத்துறையினர் இரவோடு இரவாக அகற்றினர். இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் நிர்மலா கூறுகையில், காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டதால் பாசனத்திற்கு தண்ணீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவாக பாலக்கரை பாலம் கட்டும் பணிக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள மாற்றுப்பாதை அகற்றப்படுகிறது. இதன் வழியாக சென்ற இரு சக்கர வாகனங்கள் மேலக்காவேரி பாலம் வழியாகவும், நடந்து செல்பவர்கள் அரசு ஆடவர் கல்லூரியின் நடைபாலம் வழியாக காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அனுமதிக்கப்பட உள்ளனர் என தெரிவித்துள்ளார்.

**<u>விதை, உர விற்பனை நிலையங்கள் காலாவதியான உரம் பூச்சி மருந்து விற்றால் சட்டப்படி நடவடிக்கை வேளாண் இணை இயக்குனர் எச்சரிக்கை</u>**

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை, : தரமற்ற மற்றும் காலாவதியான உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் விதைகளை விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பட்டுக்கோட்டை, பேராவூரணி, சேதுபாவாசத்திரம் மற்றும் திருவோணம் வட்டாரங்களில் உள்ள தனியார் விதை மற்றும் உர விற்பனை நிலையங்களில் தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். பட்டுக்கோட்டை-தஞ்சை சாலை மற்றும் திருவோணம் ஒன்றியம் ஊரணிபுரத்தில் அமைந்துள்ள தனியார் விதை மற்றும் உர விற்பனை மையத்தில் வரவு, விற்பனை, இருப்பு ஆகிய விபரங்களை குறித்து பதிவேடுகளை ஆய்வு செய்தார். அப்போது அனுமதி பெற்ற நிறுவனங்களிடமிருந்து மட்டுமே விதை மற்றும் உரம் கொள்முதல் இன்வாய்ஸ்படி பதிவேட்டில் இருப்பு வைக்கப்பட வேண்டும். விற்பனை விவரங்களை உடனுக்குடன் கழிக்கப்பட வேண்டும் என்று அறிவுரை கூறினார். மேலும் விலைப்பட்டியலை விவசாயிகளுக்கு தெரியும்படி எழுதி வைக்க வேண்டும். உரிமத்தின் நகல்கள் நுகர்வோர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பார்வைக்கு தெரியும்படி வைத்திருக்க வேண்டும். விற்பனை ரசீதில்

விவசாயிகளின் முழு விலாசம் எழுதப்பட வேண்டும். விவசாயிகளின் கையொப்பம் கண்டிப்பாக பெறப்பட வேண்டும். தரமற்ற மற்றும் காலாவதியான உரங்கள், பூச்சி மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது என எச்சரிக்கை செய்தார். தரமற்ற மற்றும் காலாவதியான உரங்கள் பூச்சி மருந்துகள் மற்றும் விதைகளை விற்பனை செய்தாலோ அல்லது அரசு நிர்ணயிக்கும் விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு விற் றாலோ, உரக்கட்டுப்பாடு சட்டம் 1985ன்படியும், பூச்சி மருந்து சட்டம் 1968ன்படியும், விதைச்சட்டம் 1966ன்படியும் மிகக் கடுமையான சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உரிமமும் உடனடியாக ரத்து செய்யப்படும் என்றார். ஆய்வின்போது வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளருமான சொக்கலிங்கம், பட்டுக்கோட்டை மற்றும் திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன், பேராவூரணி மற்றும் மதுக்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஈஸ்வர், சேதுபாவாசத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் பெரிய சாமி, வேளாண்மை அலுவலர்கள் முருகேசன், ஜெகதீஸ்வர், ராணி, சாந்தி, சுபா ஆகியோர் உடனிருந்தனர்.

<u>**பண்ணைக்குட்டை மூலம் வெங்காயம் சாகுபடி**</u>

ராமநாதபுரம், : கடலாடி வட்டாரத்தில் பண்ணைக்குட்டைகள் மூலம் மீன்வளர்ப்பு, வெங்காயம் சாகுபடி போன்றவை நடைபெற்று வருகிறது. ராமநாதபுரம் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம், நீர்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு விவசாய நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைத்தல், ஊரணிகள் ஆழப்படுத்துதல், வரத்துக்கால்வாய்களை தூர்வாருதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கை வளத்தை மேம்படுத்த பழ, மர கன்றுகளை நடுவதற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்தி மானியத்துடன் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கடலாடி வட்டாரம் சிறைக்குளம் பஞ்சாயத்து ராஜாக்கள்பாளையம் கிராமத்தில் பண்ணைக்குட்டைகளில் வளர்க்கப்பட்டு வரும் மீன்குஞ்சுகள் மற்றும் பண்ணைக்குட்டைகள் மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ள வெங்காய பயிர்களை கலெக்டர் நந்தகுமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) கனகராஜன், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குநர் கமால்தீன்,

உதவிப் பொறியாளர் குமரேசன், நீர்வடிப்பகுதி அணி உறுப்பினர்கள் பாபு, முருகானந்தம், தீனதயாளன் உடனிருந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**தமிழ்நாட்டில் இன்று பரவலாக மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு**

சென்னை, தமிழ்நாட்டில் இன்று (திங்கட்கிழமை) அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக பலத்த மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்குபருவமழை

கடந்த வருடம் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்ய வேண்டிய அளவு பெய்யவில்லை. எனவே தென் மேற்கு பருவமழையாவது போதுமான அளவுக்கு பெய்யவேண்டும் என்று தமிழக மக்களும், விவசாயிகளும் எதிர்பார்த்தனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இன்றுபலத்தமழை

தமிழ்நாட்டில் இன்றும் (திங்கட்கிழமை) அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் பலத்த மழை வரை அநேக இடங்களில் பெய்யும். குறிப்பாக கடலூர், அரியலூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும். சென்னையில் சில இடங்களில் மாலையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:– காரைக்குடி 11 செ.மீ., வல்லம் 10 செ.மீ., கடலூர் 9 செ.மீ., திருமயம் 8 செ.மீ., தஞ்சை, இலுப்பூர் தலா 7 செ.மீ., கந்தர்வ கோட்டை, மடுக்கூர், தேவகோட்டை, பெருங்கலூர், அறந்தாங்கி, சங்கராபுரம், திருவாடாணை தலா 6 செ.மீ. காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், புதுக்கோட்டை, உளுந்தூர்பேட்டை, ஆலங்குடி, கள்ளக்குறிச்சி, கும்பக்கோணம், அரிமளம் தலா 5 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. மேலும் 5 செ.மீ. மழைக்கு குறைவாக 50–க்கும் மேற்பட்ட இடங்களில் பதிவாகி உள்ளது.

# <u>வேளாண் சார்ந்த தொழில் தொடங்க 40 சதவீதம் வட்டியில்லா கடன்</u>

கடலூர், விவசாயிகள் குழுவாக சேர்ந்து வேளாண் சார்ந்த தொழில் தொடங்க தொழில் முதலீட்டில் 40 சதவீதம் வரை வட்டியில்லா கடனாக வழங்கப்படுகிறது என்று மத்திய அரசின் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பு அமைப்பின் அதிகாரிகள்தெரிவித்தனர்.

விழிப்புணர்வுகூட்டம்

மத்திய அரசின் வேளாண் நிதி கழகமும், சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பு அமைப்பும் இணைந்து வேளாண் வணிகத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை இடைத்தரகர் இல்லாமல் விற்பனை செய்வதற்காக விவசாயிகளே குழுவாக சேர்ந்து தொழில் தொடங்க வட்டியில்லா கடன் வழங்குகிறது. இத்திட்டம் முந்தைய மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பற்றி விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கடலூர் கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்மை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற விழிப்புணர்வு கூட்டம் நேற்று மாலை நடந்தது. இந்த கூட்டத்துக்கு கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். வேளாண்மை விற்பனைத்துறை துணை இயக்குனர் கோமதி முன்னிலை வகித்தார். நபார்டு வங்கி பொது மேலாளர் ராஜகோபால், சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பு அமைப்பின் தமிழக அதிகாரி பூங்கோதை மற்றும் டெல்லி அதிகாரி, முன்னோடி வங்கி மேலாளர் சேதுராமன், வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பால் பதத்துறை அதிகாரிகள், வங்கியாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பு அமைப்பு அதிகாரிகள் பேசியதாவது:-

65 தொழில்கள்தொடங்க அனுமதி 11-வது ஐந்தாண்டு திட்டத்தில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை இடைத்தரகர்கள் விற்பனை செய்து லாபம் ஈட்டுகிறார்கள், இதனால் அதன் பலன் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. எனவே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதற்காக குழுவாக சேர்ந்து வேளாண் உற்பத்தியாளர்கள் குழுவை தொடங்க வேண்டும். இந்த குழுவினர் வேளாண்மை, தோட்டக்கலை சார்ந்த தொழில்கள், மீன்வளர்ப்பு, பால்பதனிடும் தொழில்கள்,

கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஊறுகாய், ஜாம், ஜூஸ்தயாரிக்கும்தொழில்போன்றவற்றைதொடங்கலாம். இத்தொழில்களை 10 லட்சம் ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரையிலான முதலீட்டில் தொடங்கலாம். இந்த முதலீட்டில் 26 சதவீதத்தை மத்திய அரசு வட்டியில்லா கடனாக வழங்குகிறது. கடலூர் போன்ற பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு 40 சதவீதம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படுகிறது. மீதி தொகையை வங்கிகளில் இருந்து பருவகால கடனாக வாங்கிக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் 65 தொழில்கள் தொடங்க வட்டியில்லா கடனாக 21 கோடி ரூபாய் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் 190 தொழில்கள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்தொழில்கள் தொடங்குவதற்கு திட்ட அறிக்கை தயாரித்து தரவும், இத்திட்டம் பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும், இத்திட்டத்தில் தொடங்கப்பட்ட தொழில்களை விவசாயிகள் பார்வையிடவும் நாங்கள் ஏற்பாடு செய்து தருவோம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**<u>கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை 95.2 மில்லி மீட்டர் பதிவானது</u>**



கடலூர், மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக கடலூரில் 95.2 மில்லிமீட்டர் மழை பதிவாகியது. இடி-மின்னலுடன் மழை கோடைக்காலம் முடிந்த பின்னரும் கடலூர் மாவட்டத்தில் வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில்

கடந்த சில நாட்களாக அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் லேசான மழை பெய்து வருகிறது. இருப்பினும் காலை முதல் மாலை வரை வெயில் வாட்டி வதைத்து வந்தது. அதேபோல் நேற்று முன்தினம் காலையிலும் வெயில் கொளுத்தியது. சாலையில் அனல் காற்று வீசியதால் வாகன ஓட்டிகள் உள்பட அனைவரும் சிரமப்பட்டனர். இரவு சுமார் 10.30 மணியளவில் இடி-மின்னலுடன் திடீரென மழை பெய்ய தொடங்கியது. முதலில் லேசான சாரலுடன் பெய்ய தொடங்கிய மழையானது நேரம் செல்ல, செல்ல பலத்த மழையாக கொட்டி தீர்த்தது. மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது இந்த மழை சுமார் 1.30 மணி வரை நீடித்தது. இதனால் கடலூரில் உள்ள முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளான மஞ்சக்குப்பம் மைதானம், அண்ணா விளையாட்டு மைதானம், தலைமை தபால் நிலையம், பஸ் நிலையம், சுரங்கப்பாதை போன்ற பல்வேறு பகுதிகளில் மழைநீர் குட்டை போல் தேங்கி நின்றது. இதேபோல் சிதம்பரம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், ஸ்ரீமுஷ்ணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் பரவலாக மழை பெய்தது. இந்த மழையினால் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. நேற்று காலை வழக்கம் போல் வெயில் அடிக்க தொடங்கியது. இருப்பினும் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் கடலூரில் அதிகபட்சமாக 95.2 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது. அதற்கு அடுத்ததாக மே. மாத்தூரில் 67 மில்லி மீட்டரும், காட்டுமன்னார்கோவிலில் 55 மில்லி மீட்டரும், பெலாந்துறையில் 42 மில்லி மீட்டரும், ஸ்ரீமுஷ்ணத்தில் 30 மில்லி மீட்டரும், பரங்கிப்பேட்டையில் 28 மில்லி மீட்டரும், சிதம்பரத்தில் 24 மில்லி மீட்டரும் மழை பதிவாகி இருந்தது.

## <u>ராமநாதபுரத்தில் திடீர் மழை</u>

ராமநாதபுரத்தில் நேற்று மதியம் திடீரென இடிமின்னலுடன் சுமார் ½ மணிநேரம் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதி, சாலைகளில் மழைநீர் தேங்கியது. சிறிதுநேரம் பெய்த பலத்த மழையால் கடந்த பல மாதங்களாக நிலவி வந்த வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. விவசாய பணிகள் தொடங்கவுள்ள நிலையில் மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**<u>கர்நாடகத்தில் பருவமழை தீவிரம்: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**



கர்நாடக மாநிலத்தில் பருவமழை தீவிரமடைந்து உள்ளதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்து உள்ளது. நேற்று வினாடிக்கு 17 ஆயிரத்து 360கனஅடிதண்ணீர்வந்தது.

மேட்டூர்அணை

கர்நாடக மாநிலத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன் பருவமழை தீவிர மடைந்ததால் அங்குள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய அணைகளில் இருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 89 ஆயிரம் கனஅடி வரை அதிகரித்தது. அதன்பின் கர்நாடக மாநிலத்தில் மழையளவு குறைந்ததால் கடந்த சில நாட்களாக அங்குள்ள அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் உபரிநீரின் அளவு குறைக்கப்பட்டது. இதனால் கடந்த சில தினங்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்தது. கடந்த 14–ந்தேதி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 11 ஆயிரத்து 119 கனஅடி தண்ணீர் வந்தது. இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீர்வரத்துஅதிகரிப்பு

இதன் காரணமாக நேற்று மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 17 ஆயிரத்து 360 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதேபோல கால்வாய் பாசனத்துக்காக 500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்திருப்பதால்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் மீண்டும் உயரத்தொடங்கி உள்ளது. நேற்றைய (15–ந்தேதி) நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 111.81 அடியாக இருந்தது

**தஞ்சையில் பலத்த மழை மருத்துவக்கல்லூரி சுற்றுச்சுவர் இடிந்தது**

தஞ்சையில் பெய்த பலத்த மழையினால் மருத்துவக்கல்லூரி சுற்றச்சுவர் இடிந்து விழுந்தது. வல்லத்தில் அதிகப்பட்மாக 96 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.
பலத்தமழை
கோடைகாலம் முடிந்தும் காவிரி டெல்டா மாவட்டங்களில் வெயில் கொளுத்தி வருகிறது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுவதும், மாலை நேரங்களில் மழை பெய்வதுமாக இருந்து வருகிறது. நேற்று மாலை 6.30 மணி முதல் பெய்யத்தொடங்கிய மழை இரவு 8 மணி வரை கொட்டித்தீர்த்தது. தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, பாபநாசம், கும்பகோணம், வல்லம், நெய்வாசல் தென்பாதி வெட்டிக்காடு, பேராவூரணி போன்ற பகுதிகளில் பலத்த மழை கொட்டியது. பல்வேறு இடங்களில் பரலாக மழை பெய்தது. இதே போல் காவிரி டெல்டா மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது.
சுவர்இடிந்துவிழுந்தது
தஞ்சையில் பெய்த பலத்த மழை காரணமாக பூக்காரத்தெரு, சீனிவாசபுரம், மேலவீதி உள்பட பல்வேறு பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதில் பல்வேறு வீடுகளுக்குள்ளும் மழை நீர் புகுந்தது. இதனால் மக்கள் இரவில் தூங்க முடியாமல் அவதிப்பட்டனர். தஞ்சை புதிய பஸ் நிலையம் பகுதியில் முழங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கி நின்றது. தஞ்சையில் பெய்த பலத்த மழை காரணமாக தஞ்சை மருத்துவக்கல்லூரியின் பின்புறம் உள்ள சுற்றுச்சுவர் சுமார் 250 அடி தூரம் இடிந்து விழுந்தது. அப்போது அந்த பகுதியில் ஆள்நடமாட்டம் எதுவும் இல்லாததால் யாருக்கும் எந்தவித சேதமும் ஏற்படவில்லை.
வல்லத்தில் அதிக பட்சமழை இந்த நிலையில் நேற்று காலை முதல் மழை இன்றி காணப்பட்டது.வானம், மேகமூட்டத்துடன் காட்சி அளித்தாலும் மழை பெய்யவில்லை. காவிரி டெல்டா மாவட்டங்களில் வல்லத்தில் அதிகபட்சமாக 96 மில்லி மீட்டர் மழை கொட்டித் தீர்த்தது. காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:– கல்லணை 2.6, திருக்காட்டுப்பள்ளி 14.2, திருவையாறு 20.5, தஞ்சாவூர் 73.8, அய்யம்பேட்டை 28, பாபநாசம் 48, கும்பகோணம் 47, வலங்கைமான் 37, குடவாசல் 72.2., நன்னிலம் 17.2, அணைக்கரை 19, மயிலாடுதுறை 29, மஞ்சளாறு 31.6, மணல்மேடு 45, கொள்ளிடம் 21.5, சீர்காழி 36, பொறையாறு 19, நீடாமங்கலம் 10, கோரையாறு

62.4, பாண்டவையாறு 15.6, முள்ளியாறு 12.8, திருத்துறைப்பூண்டி 5, திருவாரூர் 26.4, நாகை 7, தலைஞாயிறு 7, முத்துப்பேட்டை 47.7, திருவாரூர் 6.2, நெய்வாசல் தென்பாதி 47.6, மன்னார்குடி 8, வேதாரண்யம் 21.8, பூதலூர் 31.7, வெட்டிக்காடு 78.4, ஈச்சன்விடுதி 33, பேராவூரணி 48.2, ஒரத்தநாடு 17.2, மதுக்கூர் 59.2, பட்டுக்கோட்டை 32, வல்லம் 96.

**<u>சம்பா சாகுபடி விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விதை நெல் கலெக்டர்தகவல்</u>**

திருவாரூரில் சம்பா சாகுபடி விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விதை நெல் வழங்கப்படுகிறது என்று கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:– மானிய விலையில் விதை நெல் விதை கிராம திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் சம்பா பருவத்திற்கான விதை நெல் 50 சதவீத மானியத்தில் வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 50 சதவீத மானியத்தில் நெல் விதைகளைப் பெற உதவி வேளாண்மை அலுவலர் களின் பரிந்துரைச் சீட்டு அவசியமாகும். விதை கிரயத்தில் ரூ.50 தொகை மானியமாக வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 ஏக்கர் பரப்புக்கு 20 கிலோ விதைகள் மட்டுமே வழங்கப்படும். இத்திட்டத்திற்கு என ரூ.94 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில் வேளாண்மைத் துறை மூலம் 421 மெட்ரிக் டன் விதைகளும், கூட்டுறவுத் துறை மூலம் 232 மெட்ரிக் டன் விதைகளும், 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட உள்ளது. தேவையான விவசாயிகள் விதைகளை வாங்கி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்